**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CMP.NO.1279/2025**

**WITNESS NO.–1**

**Date: 25.10.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ராஜ்சுந்தர் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | சத்தியமூர்த்தி | மதம் | |
| கிராமம் | தையூர் | தொழில் | |
| வட்டம் | திருப்போரூர், செங்கல்பட்டு | வயது | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **25th day of October, 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**<u>பிரமாண வாக்குமூலம் –</u>**

1. நான் தற்போது தொழில் துறை ஆலோசகராக பணிபுரிகிறேன். என்னுடைய முதல் மகள் அபிவந்திதா மருத்துவம் படித்து முடித்த பிறகு கடந்த 2023 ஆம் ஆண்டு பாரத் மேட்ரிமோனியல் திருமண தகவல் மையத்தில் அவருக்கு வரன் பார்ப்பதற்காக பதிவு செய்திருந்தேன். இந்த மனுவின் 1 மற்றும் 2 எதிர்மனுதாரார்கள் அவர்களின் மகன் கனடாவில் உள்ள 3 ஆம் எதிர்மனுதாரருக்கு எனது மகளை வரன் பேசுவதற்காக

கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் என்னை அணுகினார்கள். அப்போது எனது மகளின் மேல் படிப்பு குறித்தும் அதற்காகவும் செலவுகள் மற்றும் கனடாவிற்கு செல்வதற்கு ஆகப்போகும் செலவுகளையும் என்னால் பார்க்க முடியுமா என்ற விவரங்களை அவர்கள் என்னிடம் கேட்டார்கள் நானும் அதற்கு தயார் என்று சொன்னேன்.

2. அதன் பிறகு 3 ஆம் எதிர்மனுதாரருக்கும் எனது மகளுக்கும் திருமண நிச்சயதார்த்தம் கடந்த 07/11/2024 அன்று ரூ. 7,50,000/- செலவு செய்து சிறுசேரியில் உள்ள ஒரு ஓட்டலில் நடத்தினேன். நடைபெற்ற பத்து நாட்களில் ரூ.10 லட்சம் மற்றும் 20 சவரன் நகை ஆகியவற்றை தரும்படி என்னை வற்புறுத்தினார்கள். நானும் கொடுத்து விட்டேன். அதன் பின்னர் 09/03/2025 அன்று திருமணம் தேதி முடிவு செய்து திருமணத்திற்காக ரூ. 4,50,000/- ஐ திருமண மண்டபத்திற்கு முன்பணமாக செலுத்தினேன். (**திருமண பத்திரிக்கையை தாக்கல் செய்கிறேன்**) நான் இதனிடையே பணி நிமித்தமாக ஸ்பெயின் நாட்டிற்கு சென்றுவிட்டேன். ஆனால் இதனிடையே என் மகளும் என் மனைவியும் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களுக்கு உரிய மரியாதை கொடுக்கவில்லை என்று சொல்லி சிறு சிறு தகராறு செய்து வந்தனர்.

3. நான் இந்தியா வந்தபிறகு 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களை சந்தித்து என்ன நடந்திருந்தாலும் அதற்காக நான் மன்னிப்பு கேட்பதாக சொன்னார்கள். ஆனால் அந்த மன்னிப்பு எல்லாம் போதாது என்றும் அவர்களுக்கு திருப்த்தி இல்லை என்றும் யோசனை செய்யவேண்டும் என்று சொன்னார்கள். நான் உறவினர்கள்

முன்னிலையிலும் அதற்காக மன்னிப்பு கேட்டு விட்டேன். இருப்பினும் அவர்கள் ஏற்பதாக இல்லை. 3 ஆம் எதிர்மனுதாரரும் கனடாவில் இருந்து எங்களுடனான தொடர்பை துண்டித்து விட்டார். எங்களால் அவரை தொடர்புகொள்ள முடியவில்லை. எனவே எதிர்மனுதாரர்கள் என்னிடம் பண்ம் மற்றும் நகைகளை பெற்றுக்கொண்டும் திருமண வேலைகளுக்கும் முன்வராததால் நான் கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் 05/03/2025 அன்று புகார் கொடுத்தேன்.தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நகல் அது தான் (**தேதியிடப்படாத புகார் மனு தாக்கல் செய்கிறேன்**)

4. அந்த புகாருக்கு போலிசார் புகார் ஏற்பு ரசீதும் வழங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் ஏற்பு ரசீது தான் (**07/03/2025 தேதியிட்ட புகார் ஏற்பு ரசீது தாக்கல் செய்கிறேன்)** அந்த புகார் விசாரணைக்காக வந்த 2 ஆம் எதிரிமனுதாரருடன் வந்த 4 ஆம் எதிர்மனுதாரரும் காவல் நிலையத்தில் வைத்து என்னுடன் தகராறு செய்தார்கள். அவர்கள் சொன்னப்படி எந்த வேலைகளையும் நாங்கள் செய்யவில்லை என்றும் நிச்சயதார்தம், திருமண வேலைகளை நாங்கள் சரியாக செய்யவில்லை என்று தகராறு செய்தார்கள். எனவே போலிசார் நீதிமன்றத்தை அணுகி தீர்த்துக்கொள்ளும்படி சொல்லி அனுப்பி விட்டார்கள்.

5. இந்நிலையில் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் எனது மகளிடம் தனிப்பட்ட முறையில் பேசி என் மகள் மீது அவர்களுக்கு கோபம் இல்லை என்றும் என் மீதும் என் மனைவியின் மீது தான் கோபம் என்றும் தற்போதைக்கு திருமணம் நிறுத்தவதாகவும் சில காலம் கழித்து தனது மகளுக்கு திருமணம் செய்து வைப்பதாக பொய்யான

வாக்குறுதி கொடுத்தால் என் மகள் எங்கள் மீது தான் தவறு என்று கருதி என்னுடன் கோபித்து கொண்டு எனது உறவினரின் வீட்டிற்கு சென்று விட்டார்.

6. திருமணமும் குறித்த நாளில் நடைபெறவில்லை. என்னுடைய உற்றார் மற்றும் உறவினர்களுக்கு திருமண அழைப்பிதழ் கொடுத்த பிறகு திருமணம் நின்றுவிட்டதால் எனக்கும் எனது குடும்பத்திற்கும் மிகுந்த அவமரியாதையும் மனஉளைச்சலும் ஏற்பட்டது. எனவே நான் 16/03/2025 அன்று முதலமைச்சர் தனி பிரிவிற்கு எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுப்பதற்காக மின் அஞ்சல் மூலமாக புகார் அனுப்பினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் மின் அஞ்சல் நகல் நான் முதலமைச்சருக்கு அனுப்பி புகார் தான் (**16/03/2025 தேதியிட்ட மின் அஞ்சல் புகார் நகல் தாக்கல் செய்கிறேன்)** அந்த புகார் மீது நடவடிக்கை எடுப்பதற்காக 05/04/2025 அன்று செங்கல்பட்டு சமுக நலத்துறை அலுவலகத்தில் இருந்து விசாரணைக்காக அழைத்து இருந்தார்கள். அந்த விசாரணையில் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் வந்தார்கள்.

7. அந்த விசாரணையின் போது தான் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் திருமணம் நின்றுவிட்டால் எனது மகள் ஏதேனும் தவறான முடிவிற்கு வந்துவிடுவார் என்பதால் தான் அவரிடம் பிறகு தனது மகளுக்கு திருமணம் செய்துவைப்பதாக பொய்யாக வாக்குறுதி கொடுத்ததாக ஒப்புக்கொண்டார்கள். எனவே அங்கும் அவர்கள் எந்த சமரசத்திற்கும் வராததால் சமூக நலத்துறையில் நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் பெற்றுக்கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். அதன் பிறகு சமூக நலத்துறையில்

இருந்த என்னை தொடர்பு கொண்டு 3 ஆம் எதிர்மனுதாரரை அவர்கள் தொடர்பு கொண்டு பேசியதாகவும் அவருக்கு  திருமணத்திற்கு விருப்பம் இல்லை என்று சொல்லிவிட்டதாக சொன்னார்கள்.

8. அந்த சம்பவத்தில் என்னுடைய மகள் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டாள். என்னுடனும் என் மனைவியுடனும் பேசுவதை குறைத்துவிட்டார். எதிர்மனுதாரர்களின் செய்கையால் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டோம். 1 மற்றும் 2 எதிர்மனுதாரக்ள் என் மகள் அவரது மகனுடன் கனடாவிற்கு சென்று நன்றாக சம்பாதித்து கொடுப்பார் என்றும் என்னிடம் இருந்து அதிகம் வரதட்சணை பெறலாம் என்றும் அவர்கள் எதிர்பார்த்த நிலையில் என்னுடைய மகளுக்கு கனடா நாட்டு விசா அந்த நேரத்தில் நிராகரிக்கப்பட்டதால், எதிர்மனுதாரர்களின் எண்ணம் நிறைவேறாததால், அவர்கள் எனது மகளின் திருமணத்தை நிறுத்திவிட்டு, நாங்கள் அவர்களுக்குரிய மரியாதை கொடுக்கவில்லை என்ற பொய்யான காரணத்தை சொன்னார்கள்.

9. இந்நிலையில், எதிர்மனுதாரர்கள் வசித்து வந்த ஆவடி முகவரியில் இருந்தும் அவர்கள் வீட்டை காலி செய்துவிட்டார்கள். தற்போது எங்கு உள்ளார்கள் என்ற விவரமும் தெரியவில்லை. எனவே, 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் திருமணம் என்ற பெயரில் என்னிடம் இருந்து பணம் மற்றும் நகையை பறித்து, எனது மகளின் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கி எங்கள் குடும்பத்தை ஏமாற்றி மன உளைச்சலுக்கு ஆளாக்கியதாலும், மீண்டும் அவர்கள் இது போன்ற குற்றச்செயலில் ஈடுபடக்கூடாது என்பதற்காகவும், அவர்கள் மீது தகுந்த குற்ற நடவடிக்கை எடுத்து,

என்னை ஏமாற்றி பெற்ற பணம் மற்றும் நகை உள்ளட்டவற்றை பெற்று தரும்படியும், இழப்பீடு பெற்று தரும்படியும், பரிகாரம் கோரி இந்த தனி நபர் புகாரை தாக்கல் செய்துள்ளேன்.

S/d- K. Nilavarasan, 25.10.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur